செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 21 - 2 - 1997 இதழ்: 6

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதினக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

சிக்கல் நிறைந்த காலத்திலே லெந்து நாட்களைப் பக்தி

பூர்வமாக அனுஷ்டியுங்கள்

பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி காலை புதன் ழமை சாம்பற் புதன் வழிபாடு வட்டுக்கோட்டை ப் பேராலயத்தில் நடைபெற்றது. அப்பொழுது பேராயர் இஸ்ரவேல் மக்கள் பக்தி பூர்வமாகப் பஸ்காவை அனுஷ்டித்து வருவதனாலேதான் அந்தச் சமுதாயம் கட்டுக்கோப்பாகவும் உயர்வாகவும் இருக்கின்றது. இப்படியே கிறிஸ்தவர்களாகிய நாமும் லெந்து நாட்களைப் பக்திசிரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த நாட்களிலே நாம் உபவாசித்து, தியானித்து, ம்மை ஒறுத்து இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் யிர்த்தெழுதலையும் நமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றும், சிக்கல் நிறைந்த இக்காலத்தில் லெந்து நாட்கள் ஆவிக்குரிய உணவைத்தரும் என்றும் கூறினார்.

வாழ்வு என்பது என்ன?

'தந்தை தவறு செய்தால் தாயும் டம் கொடுத்தாள், வந்து பிறந்து ட்டோம். வாழத்தெரிய ல்லை ' என கவிஞர் கண்ண சன் பாடுகிறார்,

யாரோ செய்த கூடலின் தற் யல் விளைவு தான் நாம் ன்றால், நம் இருப்புக்கு என்ன ர்த்தம்?

சாப்பிடக் கூட வழியற்றவனுக்கு சறுதான் தெய்வம் மகாத்மா ந்தியும் இதனை ஏற்றுக்கொள் ார் 'பசித்தவனுக்கு ரொட் தான் தெய்வம்'

ஆன்மீக வாதிக்கு இவ்வுலகம் ாய். இந்த வாழ்வும் பொய். ல் உலகம் போய் சேருவது ன் வாழ்வு. அதுவே ஆண்டவ டன் சங்கமம் என்கிறான்.

இதற்கிடையில், வாழுகின்ற ாழ்வில் படுகின்ற துன்பங்களுக் ம். வடிக்கின்ற கண்ணீருக்கும் ன்ன பதில் சொல்ல போகின் றா ? 'துன்பப்படுவோர் பாக்கியவான்கள்' என கூறிவிட்டு கண்ணை மூடி நிஷ்டையில் அமராதிர்கள்,

மருத்துவமனையில் சவக்கிடங்கினுள் பெரும் சலசலப்பு உண்டானது சவப்பொட்டி ஒன்றின் மூடியை யாரோ தட்டுவதும், உதைப்பதும் கேட்டு, காவலாளி விரைந்தான், ஒரு மூலையில் கிடந்த சலப்பெட்டியிலிருந்த பிணம் மூடியை தள்ளி உதைத்தப்படி இருந்தது. மூடியை அப்புறப்படுத்திய காவலாளிக்கு ஒரே அதிர்ச்சி உள்ளே கிடந்த பிணம் உயிரோடு எழுந்தது 'ஏய் என்ன செய்கிறாய் என காவலாளி கேட்டான்.

'ஐயா, நான் சாகவில்லை. என்னை விட்டுவிடு' பெட்டிக்குள் இருந்தவன் பரிதாபமாக கேட்

(4ம் பக்கம் பார்க்க)

அமைச்சால் இழுத்தடிப்பு

நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயம் மீதான குண்டு வீச்சுத் தாக்குதலில் பலியான அரச ஊழியருக்கான நஷ்ட ஈட்டு கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை யெனத் தெரியவருகிறது.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இதுவிடயத்தில் அக்கறை மேற்கொண்டபோது புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இழுத்தடிப்பு செய்து வருகிறதாக செயலக வட்டாரங்களின் மூலம் தெரியவருகின்றது.

நவாலியில் திடீர் சோதனை

நவாலியில் நேற்று முன்தினம் (புதன்கிழமை 19- 2- 97 இடம் பெற்ற சுற்றி வளைப்பு நிகழ்வினால் அரச ஊழியர்கள் பல்கலைகழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் பாதிப்பிற்குள்ளாக்கப் பட்டுள்ளனர்.

திடீர் சுற்றிவளைப்பினால் நவாலியூர் மக்கள் அனைவரும் சென் பீற்றர் தேவாலயத்தில் மதிய வேளையில் நிற்கவைத்துக் சோதனை செய்யப்பட்டதாக பல தரப்பினரு குறை கூறியுள்ளதாக தெரியவருகிறது.

பூரண சூரிய கிரகணம்

பூரண சூரிய கிரகணம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி நிகழவுள்ளது. இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இதைப்பார்க்க முடியாது எனத்தெரிவிக்கப்படுகிறது. சைபீரியா மற்றும் ஆர்ட்டிக் கடல் பகுதியில் தான் இதைக்காணமுடியும்.

பட்டப்பின் படிப்பிற்கு பதிவு செய்தல்

யாழ்ப்பாணப் தல்கலைக்கழகத்தில் 1995ஆம் 96ஆம் கல்வியாண்டுக்குப் பட்டப்பின் படிப்பிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் யாவும் 06-03-1097 க்கு முன் பதிவாளருக்கு அனுப்பி வைக்கும்மடி கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் காய்ச்சல்

யாழ். குடாநாட்டில் காய்ச்சலின் தீவிரம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வலிகாமம் மேற்கு, தென் மேற்குப் பகுதிகளில் மலேரியா காச்சலினால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விமானம் மூலம் தபால்

யாழ். குடாநாட்டுத் தபால்கள் தற்போது நாளாந்தம் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் முதலாம் வகுப்பு அஞ்சல் பொதிகளான சாதாரண கடிதம், கடுகதிக் கடிதம், வெளியூர் கடிதம் என்பனவே விமானம் மூலம் அனுப்பப் படுகின்றன.

பகல் பராமரிப்பு நிலையம்

தென்னிந்திய குடத்தனை திருச் சபையின் அருகில் உள்ள நகர் கோவிலில் ஓர் புதிய பகல்பராமரிப்பு நிலையம் 19 - 02 - 97 காலை 9.00 மணிக்கு சபை ஊழியன் அருட்திரு T E. அசோக்குமாரும் சபையின் முகாமைக்குரு அருட்திரு S. I. ஆனந்தநாதனும் ஜெபத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆரம்பநிகழ்வில் அருகில் உள்ள பாடசாலை அதிபரும், நகாகோவிலின் கிராமசேவகரும் கலந்துகொண்டனர்.

தாக்குதல்

இணுவில் காங்கேசன்துறை வீதியில் கடந்த 8-2-97 காலை கிளைமோர்தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. இதே சமயம் 7 - 2 - 97 வரணிப்பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடம் பெயர்வு

வவுனியாவில் படையினர் ஆரம்பித்துள்ள 'எடிபல' இராணுவ நடவடிக்கையால் 8 ஆயிரம் பேர் இதுவரை இடம் பெயர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்ந்துள்ளதால் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

'நடிக மணி'

கலாநிதி காரை செ. சுந்தரம் பிள்ளை எழுதிய "நடிகமணியின் வாழ்வும் அரங்கும்" என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று 21 ஆம் திகதி நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நினைவு சிறப்புக் கூட்டம்

வட்டுக்கோட்டை இலங்கை றையியல் கல்லூரி வேதநாக ஸ்இரியரது நினைவு சிறப்புக் ட்டம் ஒன்றினை கடந்த -1-97 வெள்ளி மாலை 3 30 வியளவில் சிறப்பாக நடத்தினர் ில் விசேட சொற்பொழிவினை ராயர் அருட்கலாநிதி எஸ். பதேசன் அவர்கள் ஆற்றினார், ர் தனது உரையில் சாஸ்திரி ரது வரலாற்றையும் அவரது க்கியப் பணிகளையும் திறம்பட த்துரை தார், சாஸ்திரியார் வரும் புரிந்து கொள்ளத்தக்க கையில் தனது ஆக்கங்களை எழு ார் எஸ் ஆயர் கூறியமைகூறிப்பி த்தக்கது. திருமதி ஜீவா ரெத்தின சபாபதி பாடல்களை பாடி உதவினர், அருட்சகோதரர்கள் S யோசுவா, B தேவதாஸ், சதீஸ் டானியேல் ஆகியோர் பாடல்கள் பாடினர், அருட்சகோதரி A டெய்சி கவிதை ஆக்கி வாசித்தார். அருட்சகோ, S குகதேஸ்வரனது நன்றியுரையுடனும் அருள்திரு டி ஆர் அம்பலவாணரிது செபத்துடனும், ஆசிர்வாதத்துடன் சிறப்புக் கூட்டம் இனிதே நிறைவற்றது, கல்லூரிக்கு வெளியே இருந்தும் அனேகர் வந்து இச்சிறப்புக்கூட்டத்தில் பங்கு பற்றியமை இறையியல் கல்லூரி குடும்பத்தினருக்கு உற்சாகமளித்தது

எஸ். ஜெபநேசன் எழுதுவது

அத்தியட்சர் சபாபதி குலேந்திரன் நினைவு

அத்தியட்சர் சபாபதி குலேந்திரன் இவ்வுலக வாழ்வை 1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி நீத்தார். அப்பொழுது அவருக்கு வயது 92.

பேராயர் குலேந்திரனிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் அனேகம். ஒரு மனிதன் 92 வயதிலும் பூரணமான வாழ்க்கை வாழலாம், என்றும் யாருக்கும் தொல்லை கொடுக்காது தனது சீவியத்தை நடாத்தி முடிக்கலாம் என்றும் நிரூபித்துக் காட்டியவர்.

அவருடை நீண்ட ஆயுளுக்கு காரணம் இறைபக்தி, கடவுள் நம்பிக்கை, உள்ளக கட்டுப்பாடு தேகப்பியாசம் என்பவை,

பேராயர் குலேந்திரன் 1900ம் ஆண்டு செப்டெம்பர் மாதம்23ல் பிறந்தவர், 20ம் நூற்றாண்டின் மாற்றங்கள் முழுவதையும் தனது கண்ணாற் கண்டவர் 19 நூற்றாண்டின் வரலாற்று நாயகர்களைப் பற்றியெல்லாம் தெளிவாக அறிந்திருந்வதர். இவரை ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்று கூறினார்கள் பேராயர் குலேந்திரன் கடவுளிடத்தில் உண்மையான அன்பு கொண்டவர் 1931ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு சுதந்திர கிடைப்பது உறுதியாகிவிட்டது- அப்பொழுது பல கிறிஸ்தவர்களின் இந்து சமயத்துக்குத் தம் பௌத்த சமயத்திற்தும் தாவி விட முயற்சித்தனர், ஆனால் சபாபதி குலேந்திரன் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான பின்னரும் மதகுருவாசமுனைந்தார்பேராயர் குலேந்திரனின்தேகஆரோக்கியத்திற்கு மன அடக்கமும் தேகப்பியாசமுமே காரணம். காலையிலே 4 கிளாஸ் நீர் அருந்துதல் மாலையிலே 2மைல் நடத்தல் என்பதனை நீண்ட காலம் தனது வழக்கமாகக் கொண்டிருந்தார். காலையிலே வேத வாசிப்பு, பிரார்த்தனை நடக்கும். அந்த நேரத்தில் யாரும் அவரை சந்திக்க முடியாது. அந்த பிரார்த்தனை நேரங்களில் அவருடன் பேச முயன்றவர்கள் வெக்கப்பட்டுப் போயினர் காலை மாலை ஆராதனைகளை அவர் என்றுமே உதாசீனம் செய்ததிலை. தமது வாழ்வின் அந்திய காலத்தில் மிகுந்த பக்தியுள்ளவராகக் காணப்பட்டார், மரணம் சமீபித்து வருகின்றதென்று அறிந்தும் அதனைக் குறித்து எள்ளளவேனும் வேதனைப்படாமல் இருந்தார். தனது மரணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதில் ஊக்கமாக ஈடுபட்டார். அல்பிரட் டெனிசனின் பிரவரும் அடிகளைத் திரும்பத் திரும்பக் கூறிவந்தார்.

Thou Madest Man, He
Knows Not Why
He Thinks He Was Not
Made To Die But, Thou
Hast Made Him And
Thou Art Just.

Tenny Son

(மனிதனை நீர் உருவாக்கினீர் அவன்னுக்கு அதன் காரணம் தெரியாது அவன் தான் சாகாமல் இருக்கப் படைக்கப்பட்டவன் என்று எண்ணுகிறான்

ஆனால் நீர் அவனைப்படைத்தவர், நீர் நீதி வழுவாதவர்)

கிறிஸ்தவ ஊழியத்துக்குதன்னை முழுமையாக ஒப்படைத்தார்.

இவருடைய தீர்மானத்தைக் கண்டு தகப்பனார் மனமுடைந்து போனார். சகோதரிகள்வேதனைப்பட்டனர் ஆனால் சபாபதி குலேந்திரனோ தம்மை அழைத்தவர் இன்னாரென்றறிந்து அவருக்கே தம் வாழ்வை அர்ப்பணித்தார். இவரிடத்தில் கடவுள் விசுவாசமும், நம்பிக்கையும் காணப்பட்டன. உலகபிரமான தோல்விகள், ஏமாற்றங்கள் நஷ்டங்கள் எல்லாவற்றையும் கிறிஸ்தவ விசுவாசத்தினாலே சகித்துக் கொண்டார் எந்த இக்கட்டான நிலையிலும் இறுதியில் "ஆனாலும் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியால் நமக்கு ஜெயம் கொடுக்கின்ற கடவுளுக்கு ஸ்தோத்திரம் என்று கூறிக் கொள்வார்"

கற்பதும், கற்பிப்பதும் அருளுரையாற்றுவதும் இவருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள். இவர்களுடைய நூல்களிலே ஒன்று உலகின் மிகப் பிரபல்யமான பல்கலைக் கழகங்களில் படிக்கப்பட வேண்டிய நூலாக விதிக்கப்பட்டுள்ளது. ஆங்கில இலக்கியம், வரலாறு வேதாகமம் இறையியல் சமயங்கள் என்பனவற்றில் இவர் நல்லறிஞராகத் திகழ்ந்தார். ஆங்கிலம், தமிழ் சமஸ்கிருதம், இலத்தீன், எபிரேயம், கிரேக்கம் ஆகியமொழிகளை கற்றுத்தேறியிருந்தார். இவருடைய ஆங்கிலநடை கொம்பீரமானது. தமிழ், பாமரரும் விளங்கக்கூடிய எளிமை வாய்ந்தது

அமரர் சி. வ. வைத்தியலிங்கம் அவர்கள்

சென்ற வருடம் டிசம்பர் திங்கள் 17ந் திகதியன்று, திரு. சி. வ. வைத்திலிங்கம் அவர்களின் மறைவினால் சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை, நீண்டகால செயல் திறன் மிக்க ஒரு உறுப்பினரை இழந்துள்ளது- தெல்லிப்பளையை தமது பிறப்பிடமாகக் கொண்ட திரு சி. வ. வைத்தியலிங்கம் ஆசிரியர் அவர்கள் 1950ம் வருடம் யா/டிறிபேக் கல்லூரியில் அதிபர் அமரர் கே. எஸ். சரவணமுத்து அவர்களின் கீழ் ஆசிரியனாகக் கடமையேற்றார் அந்நாள் தொடக்கம் அவர் இறக்கும் வரையும் சாவகச்சேரியிலே வாழ்ந்து வந்தார்

ஆசிரியனாகத் தமது பணியினை ஆரம்பித்த திரு. சி. வ. வை. அவர்கள் தமது திறமையாலும் விடாமுயற்சியாலும் யா/டிறிபேக் கல்லூரியின் கனிஷ்ட அதிபராகத் தரமுயர்த்தப்பட்டார் 1975ம் வருடம் ஆசிரியர் சேவையிலிருந்து அன்னார் இளைப்பாறினார் அவர் தம் தோற்றப் பொலிவும், குரல் வளமும் அவரின் கீழ் கல்வி பயின்ற மாணவ குளாத்தை அவர் பால் காந்தம் போல் ஈர்த்தது கண்டிப்புக் கலந்த அன்பினால் தம் மாணவர்களுப் போதனையைவழங்கினார் வகுப்பில் பின் தங்கிய நிலையிலிருந்த பல மாணவர்கள் திரு சி, வ வை அவர்களின் இடையறா முயற்சியால் முதன்மாணாக்கராகத் திகழ்ந்தனர் இதனை அம் மாணக்கர் நன்றியுணர்வுடன் சாட்சிபகர்வர் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டு மென்ற உறுதி கொண்டவர் அன்னார் "கடமையே கண்ணாயினார்" என்ற முது மொழிக்கமைய தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணியை நிறை வேற்ற முன்நிற்பார்,

திரு சி வ வை அவர்கள் சமூக நலனில் அக்கறையுடையவராகத் திகழ்ந்தார் கூட்டுறவுச் சங்க நிறுவனங்களில் அங்கத்தவராகப் பணியாற்றி தொடர்ந்து சாவகச்சேரி பல நோக்குகூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத்தலைவராகக் கடமையாற்றினார் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக உழைத்தார்,

சாவகச்சேரி தென் இந்திய திருச்சபையுடன் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புடையவராக வாழ்ந்தார் திருச்சபையின் நிர்வாகசபை உறுப்பினராக, செயலாளராக பல்வேறுபட்ட முக்கிய பணிகளை ஆற்றி திருச்சபை வளர்ச்சியில் பங்கு கொண்டார் அண்மையில் சாவகச்சேரி ஆலயத்திற்குஏற்பட்ட அனர்த்தங்களின் பின் அவ்வாலயத்தை புனரமைக்கும் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றார்-

ஒரு பூரண வாழ்வினை வாழ்ந்து முடித்த திரு சி வ வைத்தியலிங்கம் ஆசிரியர் அவர்கள் தமது 80வது அகவையில் அமரரானார் அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக

பொ- ஞானசிலன்

சிரிக்க

தெருக்குறள்

(B) பண்டுக்குள் வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
(ரவுண்ட் அப்)பில் சிக்குபவர்

எப்பொருள் தொலைத்தார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
ID கார்ட் தொலைத்த மகற்கு

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகளுக்கு
விமானத்தில் இடம் கிடைக்கக் கேட்ட தாய்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி கனடிய
விசாவுடன் ரிக்கற் அனுப்பிவிடல்

தந்தை மகற்காற்றும் உதவி பத்துலட்சம் கட்டி
மகனைப் பிறநாட்டுக்கனுப்பிவிடல்

கேடில் விழுச் செல்வம் (கொழும்பு ID) ஒருவற்கு
மாடல்ல மற்றுப்பிற

பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்கு அணிகலம்
(சென்றிப்பொயின்ற்) தாண்டுகையில்

காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கே வீட்டைப்
பூட்டி விட்டுக் கொழும்பு செல்பவருக்கு

வகுத்தான் வகுத்த வகையால்லாற் கோடி தொகுத்
தார்க்கும் அவுஸ்திரேலியா விசா கிடைப்பதரிது

அந்தி சாய்ந்த பின் உலாப் போக நினைப்பவன்
மனிதனோ? எருமையோ? சொல்

'தெருவள்ளுவர்'

1992ம் ஆண்டு பனி நிரம்பிய பெப்ரவரித் திங்களில் அவர் உயிர் பிரிந்தது

"உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு அவன் முடிவு சமாதானம்" என்ற வசனத்துக்கு இலக்கணமாசத் தன் சீவிய ஓட்டத்தை முடித்தார்.

செல்வது சரியான பாதையாக இல்லாத போது
வேகமாக ஓடுவதால் என்ன பயன்?

உதயதாரகை

ஆன்மீகப் பயிற்சியின் அவசியம்

லெந்து காலம் மீண்டும் தொடங்கி விட்டது. கடந்த சாம்பல் புதன் கிழமைத் தொடக்கம் வருகிற பெரிய வெள்ளிக் கிழமை வரை நமது ஆண்டவர் நமக்காகச் சிலுவையில் மாண்ட கல்வாரிச் மலைச் சிகரத்துக்கே அவர் சென்ற பாதையில் நாமும் அவரோடு கூட அவரை பின் தொடருகிறோம். கெத்சமேனேயையும் கொல்கொதாவையும் மீண்டும் மனதிலே நிறுத்தி தியானிக்கிறோம். இவ்வுலகின் கவலையெல்லாம் நாம் விட்டு விட்டு ஆண்டவருடைய திருப்பாதத்தண்டை அமர்ந்து இந்த பரிசுத்த நாட்களில் அவர் பேசக் கேட்கவேண்டும்.

இந்த லெந்து நாட்களில், பக்திப் பயிற்சியில் ஈடுபட்டு தியானிக்க அழைக்கப்படுகிறோம். "பக்தி பயிற்சியில் நிலைத்திரும். உடற்பயிற்சி ஓரளவுதான் பயன் தரும். தேவ பக்தியே அளவில்லாப் பயன் தரும். ஏனெனில் இம்மையிலும் மறுமையிலும் வாழ்வு பெறுவோம் என்னும் உறுதிப்பாடு தேவபக்தியில் அடங்கியுள்ளது" (1 தீமோ 4:8) எனப் பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகின்றார்.

ஆன்மீகப் பயிற்சியென்றாலும், பக்திப் பயிற்சி என்றாலும் ஒன்றுதான். ஆன்மீக வாழ்விற்கு மற்றவர்களை அழைத்துச் செல்ல வேண்டியவர்கள் பக்திப்பயிற்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும். "பக்திப் பயிற்சியில் நிலைத்திரும்" என்று அபோஸ்தலனாகிய பவுல் எழுதுகின்றார் என்றால், அதற்குக் காரணம் ஆன்மீக வழிகாட்டிகள் அத்தனை பேரும் பக்தியில் பயிற்சிபெற வேண்டும் என்பதை வலியுறுத்தவேயாகும். பக்திப் பயிற்சி அடிப்படையானது, மிக அவசியமானதும் கூட என்பதை மறந்து விடக்கூடாது.

எப்படி உடற்பயிற்சிகள் உடல் வளர்வதற்கு உதவுகின்றனவோ, அதைப்போன்று பக்தி முயற்சிகள் ஆன்மீக வாழ்வு உறுதிப்பட உதவுகின்றன. நமது பாடசாலைகளிலும், இறையியற் கல்லூரிகளிலும் உடற்பயிற்சிக்கும், பரீட்சைக்கும் கொடுக்கும் ஊக்கம் ஞானப்பயிற்சிக்கும் கொடுத்தால் எத்தனையோ புனிதர்களை உருவாக்கலாம். உடற் பயிற்சியினைப் போன்று, ஆன்மீகப் பயிற்சியும் தேவை என்பதை நமது குருமாரும், திருச்சபையாரும் நன்றாக உணரவேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் மக்கள் தங்களை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ள, பல முற்றவைகளாய்க் காத்துக்கொள்ள பல வழிகளைக் கையாளுகிறார்கள். சரீரத்தைப் பலப்படுத்த பாடுபடும் மானிட சமுதாயம் தன் ஆத்மாவையும் ஆவியையும் பெலப்படுத்த எந்த முயற்சியையும் எடுக்கக் காணோம். இந்த லெந்துகாலத்தில், ஆத்தும பெலனோ உள்ளான மனுஷனில் அடையும் பெலனோ என்றென்றும் நித்தியமாய் நின்று நிலைக்கிறது என்பதை நினைவுப்படுத்தி தியானிக்க மீண்டும் இறைவன் நமக்கு ஒரு சந்தர்ப்பத்தை தருகிறார்.

ஆகவே, எமது தனிப்பட்ட வாழ்வு, திருச்சபை வாழ்வு, சமுதாய வாழ்வு ஆட்டம் காணமல் இருக்க, தள்ளாடாமல் இருக்க ஆன்மீக உணவைப் பெற, லெந்து காலம் ஒரு சந்தர்ப்பமாக இருக்கிறது. அது என்றும் நித்தியமாய் நின்று நிலைக்க தொடர்ச்சியான ஆன்மீகப் பயிற்சி ஒவ்வொருவருக்கும் அவசியமாய் இருக்கிறது.

ரவீந்திரநாத் தாகூரின் செபம்

எனுடைய ஆசைகள் அநேகம் என்னுடைய தவறுதல்கள் பரிதபிக்கப்படத்தக்கவை, ஆனாலும் கல்லான மனதுடன் அவைகளை எனக்கு மறுத்தாய். அப்படி மறுத்ததால் என்னை இரட்சித்தாய்

இந்தக் கிருபை என் சீவியத்தில் இடைவிடாமல் கிரியை செய்து வந்தது

நான் கேளாமல் நீ எனக்குத் தந்த மகத்தான கொடைகளை அனுபவிக்க என்னைப் பக்குவம் ஆக்கிக் கொண்டு வருகிறாய் இத்தச் சூரியனும் இந்த வெளிச்சமும் இந்தச் சீவனுள்ள சரீரமும் என் மனதுமாகிய இந்த மகத்தான ஈவுகள் இப்படி எனைப் பக்குவம் ஆக்கி என்னைப் பேராசையின் அபாயங்களிலிருந்து என்னை மீட்டுக் கொண்டே வருகிறது

ஆனாலும் ஒன்றும் தராமல் மறுப்பினால் என் பகுத்தறிவற்ற ஆசைகளின் அபாயங்களிலிருந்து உனக்குள் முழுவதும் ஏற்றவனாக ஆக்கிக்கொண்டே வருகிறாய்.

மனிதனும்

மனிதனுக்கு மனிதன் மனங்களாலும் குணங்களாலும் வேறுபட்டவன். ஏன் ஒரே சூலில் உருவான இரட்டையர்களிடையே உடலமைப்பில் ஒற்றுமைகள் காணப்பட்டாலும் அவர்களின் செயற்பாடுகள் மன எண்ணங்கள் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது இவ்வடிப்படையில் ஓரறிஞர் மனித மனங்களை

மனங்களும்

இடை நிலை
உன்னத நிலை
என மூவகையாக வகுக்கின்றார்.

இதில் 'கடை நிலை' என்பது எனது-னது, உனது-எனது அதாவது என்னுடையவைகளும் எனது பிறனுடையவைகளும் எனது என்ற பேராசையும் தன்னலமும் கொண்டதாகக் காணப்படுகிறது.

இதில் 'இடைநிலை' என்பது எனது-எனது, உனது-உனது அதாவது என்னுடையவைகள் என்னுடையதாகவும், பிறனுடையவைகள் அவனுடையதாகவும் இருக்கட்டும் என்றதான அவரவர் உரிமைகள் அவரவர்க்குரிய தெளிவான மனப்பாங்கை இது கொண்டிருக்கும்.

இதில் 'உன்னத நிலை' என்பது எனது-உனது, உனது-உனது அதாவது என்னுடையவைகள் அனைத்தும் உனக்கே, உன்னுடையவைகளும் உனக்கே என்ற சாதாரண மனித மனங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கின்ற, தன்னலம் அறவே நீக்கப்பட்ட தியாக மனப்பாங்கைக் கொண்டது.

எனவே இந்த மூவகை நிலைகளிலும் நாம் எந்த நிலையில் நிற்கிறோம் என்பதை சற்றே சிந்திப்போம்.

தொகுப்பு
J. M. T. றொட்றிக்கோ
நம்பிக்கை இல்லம் இணுவில்

கடந்து வந்த பாதையில்

தொடர்ச்சி

(இ) இந்த யோசனைகளை அமுல் செய்வதற்கு இராணுவ உதவி வழங்குமாறு இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் கேட்கும் பட்சத்தில் அத்தகைய இராணுவ உதவியைக் கொடுத்துதவ இந்திய அரசாங்கம் முன்வர வேண்டும்.

(ஈ) தமிழ் நாட்டிலுள்ள இலங்கைய அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதுமான இலங்கையிலுள்ள இந்தியப்பிரஜைகள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவதுமான இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவதுமான நடவடிக்கைகளை இரு நாடுகளும் துரிதப்படுத்தும்.

(உ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் சகல சமூகங்களிலும் சரீரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இந்திய — இலங்கை அரசாங்கங்கள் பரஸ்பரம் ஒத்துழைக்கும்.

2:17 இந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் தேர்தல்களில் சகல சமூகங்களையும் சேர்ந்த வாக்காளர்கள் சுதந்திரமாகவும் பூரணமாகவும் நேர்மையாகவும் கலந்து கொள்வதை இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் செய்யவேண்டும். இந்திய அரசாங்கம் இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

2:18 இலங்கையின் உத்தியோக பூர்வமொழி சிங்களமாக இருக்க வேண்டும் – தமிழ், ஆங்கில மொழிகளும் உத்தியோக மொழிகளாக இருக்கும்.

3 இந்த உடன்படிக்கையும் இதனுடன் சேர்ந்த இணைப்பும் கைச்சாத்திடப்பட்டதும் அமுலுக்கு வர வேண்டும்.

இந்த உடன்படிக்கை இன்றைய தினமான 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி இரண்டு பிரதிகளாக எங்களால் கைச்சாத்திடப்படுகிறது இரண்டு பிரதிகளும் சமமான அதிகார பூர்வமானவையாகும்.

(முற்றும்)

சிறார் சோலை

"உனக்கு விரோதமாய் உருவாக்கு தீமை -
சடுதியிலே வாய்க்காதே போகும்"

அன்பான தம்பி தங்கைகளே!

1997 ஆம் ஆண்டில் ஒரு மாதகாலம் கடந்து போயிற்று கடந்த மாதம் முழுவதும் காத்து நடத்திய கர்த்தரைத் துதிப்போம்.

ஒரு முறை நேபுகாத்நேசார் மன்னன் ஒரு விக்கிரகத்தை உண்டு பண்ணி, தான் கீதவாத்தியங்களை வாசிக்கிறபோது யாவரும் வந்து அந்த விக்கிரகத்தை பணிந்து கொள்ளுமாறு அறிவித்தான். ஆனால் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த சாத்ராக், மேஷாத், ஆபேத்நெகோ என்னும் மூன்று மனிதர்களும் அக்கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை வர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால் தான் அவர்களை எரி நெருப்பில் போடப்போவதாக பயமுறுத்தினான் மன்னன். ஆனால் அந்த பயமுறுத்தலுக்கும் அவர்கள் அஞ்சவில்லை "எம்மைக் கடவுள் தப்புவிப்பார். தப்புவிக்காமற் போனாலும் நாம் நீர் செய்து வைத்த விக்கிரகத்தை வணங்க மாட்டோம்" என உறுதியாகக் கூறினர். எரி நெருப்பில் போட்டான் மன்னன். ஆனால் நெருப்புள் போடக்கொண்டு போனவர்களே எரிந்தனர். கடவுளின் பிள்ளைகளான சாத்ராக், மேஷாக், ஆபேத் நெக்கோவுக்கு ஒன்றுமே நடக்கவில்லை. அவர்களின் கடவுள் தான் உண்மையான கடவுள் என்று அறிந்து கொண்ட நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்தில் அவர்களை உயர்த்தினான்.

இதிலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம்? எமக்கு என்ன சோதனை வந்தாலும் எமது நல் நம்பிக்கையில் இருந்து நாம் விலகக்கூடாது. தொடர்ந்து நம்பிக்கையில் நாம் நிலைத்திருப்போமானால் இறைவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பார்.

சிந்திப்போமா? செயற்படுவோமா??
கர்த்தரின் ஆசி உங்களுடன் என்றும் கூட இருப்பதாக.

* * * * * *

சிறுவர் சிரிப்பு

நோயாளி:- டாக்டர் .. எதைப்பார்த்தாலும் ரெண்டு ரெண்டாத் தெரியுது டாக்டர்.....

கண்ணைத்தியர்:- கவலைப்படாதீங்க இதுக்கு ஒரேவழி — ஒரு கண்ணை எடுத்துட்டா சரியாய்போயிடும்.

(ஜே. ரி.)

* * * * * *

சென்றவாரப் புதிரின் விடை

"சாரிபாத்"

24- 1- 97 இல் வெளிவந்த புதிருக்கான சரியான விடையை எழுதி அனுப்பியவர்:-

பாலகுலந்திரன் கனிஸ்ரா -
பெண்கள் இல்லம் சாவச்சேரி

இவ்வாரப் புதிர்

"நீர் ஊற்றண்டையில் உள்ள கனிதரும்செடி" என்று தன் தகப்பனால் ஆசீர்வதிக்கப்பட்டவன் யார்?

வேதத்தை புரட்டி விடையை தேடுங்கள் கண்டுபிடிக்க முடியாதவர்கள் அடுத்த இதழை புரட்டுங்கள்

சரி தம்பி தங்கைகளே--அடுத்த இதழில் சந்திப்போமா?

அதுவரை என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

சந்திரகாந்தன் அடிகளின் அண்மைக்காலத் தமிழ் நூல்கள் இரண்டு

யாழ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறைகளின் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமாகிய அருட்கலாநிதி ஏ ஜே வி சந்திரகாந்தன் அடிகளின் நவீன இறையியலின் அடிப்படைகள்' என்ற நூலும், இவரால் தொகுக்கப்பட்ட இன்னுமொரு நூலாகிய 'கிறிஸ்தவ நாகரீகம் - சொற்களஞ்சியம்' என்ற இறையியற் சொல்லாக்க முயற்சியும் தமிழ் கிறிஸ்தவ அறிஞர்களதும் மாணவர்களதும் கவனத்தை பெரிதும் ஈர்ந்துள்ளது-

எமது தமிழ்த் திருச்சபைகளைப் பொறுத்தவரையில் இறையியல் தொடர்பான நூல்களின் தேவை முன்னெப்போதும் இல்லாதவாறு இன்று ஆழமாக உணரப்படுகின்றது. நமது சொந்தச் சூழமைவிலே இறையியலைக் கற்று உருவாக்கம் பெறும் குருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு, யாழ் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத்தை பட்டப்படிப்பிற்கான பாடமாகத் கற்கின்ற மாணவர்களுக்கும் இன்னும் இறையியலில் ஆர்வமும், நாட்டமும் உள்ள அனைவருக்கும் மிகுந்த பயன் அளிப்பவையாக இவ்விரு நூல்களும் விளங்குகிறன-

நவீன இறையியலின் அடிப்படைகள்

யாழ் பல்கலைக் கிறிஸ்தவ மன்றத்தின் ஆய்வுத் தொடரில் இரண்டாவதாக வெளிவந்துள்ள இந்நூலானது 'தமிழ் மொழியை ஊடகமாகக் கொண்ட கிறிஸ்தவ இறையியல் வளர்ச்சியை ஊக்குவித்து உயர்வடைச் செய்கின்ற, தென்னிந்திய திருச்சபையின் முன்னால் யாழ் ஆயர் பேரருட்திரு டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்கட்கும் அவரின் அன்புசால் சகோதரனாகிய மருத்துவர் மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் பேராசிரியர் அருள்மிகு டானியேல் ராஜரட்ணம் அம்பலவாணர் அவர்களுக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது-

இந்தியாவிலிருந்து, குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து காலத்துக்குக காலம் கிறிஸ்தவம் மற்றும் இறையியல் தொடர்பான சில தமிழ் நூல்கள் வெளிவருகின்றனவாயினும் விவாதத்திற்கும் மாற்றத்திற்கும் உட்பட்டு விரைந்து வளர்ந்து வரும் தற்கால இறையியற் சிந்தனைகளை, ஆய்வுகளை தாங்கி வெளிவரும் நூல்கள் மிகக் குறைவே இவ்வகையில் சந்திரகாந்தன் அடிகளுடைய இந்த நன் முயற்கி பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியது.

தற்கால இறையியல் உலகிலே முன்னிலைப்படுத்தி பேசப்படும், விவாதிக்கப்படும் முக்கியமான சில பிரச்சனைகளை இனம் காட்டுவதாக அமையும் இந் நூலானது எட்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு இறையியற் சஞ்சிகைகளில் எழுதப்பட்ட அறிமுக ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பாக அமையும் இந்நூல் பரந்து விரிந்து கிடக்கும் இறையியற் பரப்பின் சில முக்கிய பகுதிகளை இடங்களை தொட்டு நிற்கின்றது

தமிழ் நேசன்
கொழும்புத்துறை

ஞாபகார்த்த ஆராதனை

காலஞ்சென்ற அலிஸ் அரியரத்தினத்தின் மூன்றாவது ஞாபகார்த்த ஆராதனை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது 707 இலக்க இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் 4-2-97 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருமதி செல்வராசா அவரது குணப்பண்புகளை விமர்சித்து, பிறருக்கு உதவுவதுபற்றிய அவரது தாராள சிந்தையினையும், அரு சணவனுக்கு சுய சுகவீனங்களை பொருட்படுத்தாது பணிவிடை செய்த மனமாட்சியினையும் மனதாரப் போற்றினார். திருமதி பத்மபாலன் இனிய கீதமொன்றைப் பாடினார். புத்தூர் வயோதிபர் இல்ல முகாமையாளராகிய திரு பென்பவிங் இந்நிகழ்வில் கலந்து கொண்டு நன்றிச் செப்பம் நல்கினார். வண S S ரொன்ஸ் போதகர் அலிஸ் அம்மையாரின் உதாரண வாழ்க்கையினை மையப் பொருளாக வைத்து அருளுரையாற்றினார், அன்னாரினது பிரிவால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள திரு R S அரியரெத்தினம் அவர்களால் அளிக்கப்பட்ட இனிய மதிய போசன விருந்துடன் இவ் வாராதனை நிறைவுபெற்றது.

வாழ்வு...

டான் 'அதெப்படி முடியும். நீ இறந்து விட்டதாக டாக்டர் சான் றிதழ் தந்துவிட்டார், உன் ஆத்ம சாந்திக்காக சாமியாரும் செபித்து விட்டு போய் விட்டார். எனவே நீ செத்து விட்டாய்'

'நான் சாகவில்லை, என்னைக் காப்பாற்று' 'உஷ் அமைதி செத்தவன் பேசக்கூடாது தொந்தரவு செய்யாமல் படுத்துக்கொள்' என்று விட்டு காவலாளி மூடியை போட்டு ஆணியால் அறைந்தான்

இயேசு தன் பிதாவின் சித்தத்தை செய்வதே தன் வாழ்வு என கருதினார். செய்து முடித்து நமக்கெல்லாம் 'இலட்சிய மனிதர்' ஆனார். உனது இருப்பைக் காண்பிக்க நீ தான் முயல வேண்டும் இயேசுவின் பாதையில் இலட்சியங்களை சுமந்தபடி நம்பிக்கையோடு அடிவைப்போம்.

"நான் கடவுளை மறுக்கவும் இல்லை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. நான் நிஜவாழ்வில் காண்பது மனிதனும் அவனது வாழ்க்கைப் போராட்டமும்! செத்த பின்பு அவன் நிலை என்ன என்று யோசிப்பதை விட அவன் வாழும் போது மகிழ்ச்சியாயிருக்க அவன் என்ன செய்ய வேண்டும் என்பது தான் அடிப்படைக் கேள்வி"

இப்பத்திரிகை வடடுக்கோட்டை ஆதிவக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் ஜி. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.